பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு



Registered as a News paper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 9 [5-3-67] இதழ் 23
பராபவ மாசி 21 ஜூலை 22 ஞாயிற்றுக்கிழமை



றிபோறிங்
செய்துகொடுக்கப்படும்.

ராமகிருஷ்ணாஸ்
ஸ்ரான்லி றேட், - யாழ்ப்பாணம்.
போன்: 7179


2465

## தி. மு. க.

# மந்திரிசபை பட்டியலை அண்ணா சமர்ப்பித்தார்





## நெடுஞ்செழியன், கருணாநிதி, மதியழகன், சத்தியவாணி முக்கிய மந்திரிகள்

### நிதிஅமைச்சு அண்ணாவிடம் இருக்கும்

சென்னை, மார்ச். 24

தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை இன்று 9 பேர் அடங்கிய மந்திரிசபை பட்டியலை தமிழ்நாடு கவர்னர் திரு. உஜ்ஜல் சிங்கிடம சமர்ப்பித்தார்.

முதல் அமைச்சராகப் பதவியேற்கவிருக்கும திரு. அண்ணாதுரை, பொதுத்துறை, பொது நிர்வாகம, அகதிகள், இடமபெயந்தோர் விபரம ஆகியவற்றுடன் நிதி அமைச்சுப் பொறுப்பையும ஏற்றுள்ளார்.

திரு. வி. ஆர். நெடுஞ்செழியனுக்கு கல்வி, தொழில் அமைச்சு ஒதுக்கப்பட்டுள்ளது.



திரு. மு. கருணாநிதிக்கு மராமத்து போக்குவரத்து அமைச்சும் திரு. கே. மதியழகனுக்கு உணவு அமைச்சும் திரு. கே. கோவிந்தசாமிக்கு விவசாய அமைச்சும், திருமதி சத்தியவாணிமுத்துவுக்கு ஹரிஜன நல, செய்தி அமைச்சும், திரு. மாதவனுக்கு திட்ட அமைச்சும், திரு. முத்துசாமிக்கு ஸ்தலஸ்தாபன அமைச்சும், ஜனப் சதீக் பாஷாவுக்கு சுகாதார அமைச்சும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை திரு. அண்ணாதுரை இந்த 9 பேர் கொண்ட மந்திரிசபைபட்டியலை கவர்னரிடம் சமர்ப்பித்தபின் மற்றொரு பட்டியலை தாம் பின்னர் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தார் உபமந்திரிகளின் பெயரை நாம் விரைவில் சமர்ப்பிப்பதாக அவர் தெரிவித்தார்.

தி. மு. க. மந்திரிகள் ரூ. 500 மட்டுமே சம்பளமாகப் பெறுவர்களென்றும் இது பற்றி மறுபரிசிலனை செய்வதற் கில்லையெனவும் திரு. அண்ணாதுரை நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சென்னைநகரில் விடுகள் இருக்கும் மந்திரிகள் அந்த வீடுகளிலேயே வசித்துவருவார்களென்றும் வீடில்லாதவர்களே அரசாங்க வாசஸ்தலங்களில் குடியிருப்பார்களென்றும் திரு. அண்ணாதுரை தெரிவிந்தார்.

சொந்தமாகக் கார்வைத்திருக்கும் மந்திரிகள் தமது கார்களையே பாவிப்பார்களென்றும் இல்லாதவர்கள் சிறிய கார்களையே உபயோகிப் பார்களென்றும் அவர் நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

திரு. அண்ணாதுரையும்அவரது மந்திரிகளும் நாளைக் காலை 10 மணிக்கு ராஜாஜி மண்டபத்தில் பதவியேற்பார்கள். இன்னும்சிலதினங்களில் மற்றுமொரு மந்திரி சபைப் பட்டியலைச் சமர்ப்பிப்பதாகவும், அதில் ஒரு சிலரே இருப்பார் களென்றும் திரு. அண்ணாதுரைதெரிவித்துள்ளார்.

திரு. அண்ணாதுரை நிதியமைச்சின் பொறுப்பை ஏற்பாரென்றும, திரு. நெடுஞ்செழியன் கல்வியமைச்சைப் பொறுப்பேற்பாரென்றும் 'ஈழநாடு' [illegible] இருந்தது.

---

காங்கிரஸ் பார்லிமெண்ட் குழு தலைவர் பதவி

## இந்திராவுக்கு ஆதரவு அதிகரிக்கிறது

புதுடில்லி, மார்ச். 4

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்ட் குழுவின்தலைவர் பதவிதேர்தலின்போது திருமதி இந்திராகாந்திக்கும் திரு. மொரார்ஜி தேசாய்க்குமிடையில்போட்டி ஏற்படும என்பது உறுதி என்றாலும், திருமதி காந்திக்கு வெகுவாக ஆதரவுகூடிவருவதாக காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமதிகாந்தி தமக்குஆதரவு திரட்டுவதில் முழுமூசாக இறங்கியிருக்கின்றார். அவருக்கு தலைவர் காமராஜும ஆதரவுதேடுகிறார்.

இதற்கிடையில் முன்னாள் உள்துறை மந்திரி திரு குல்சாரிலால் நந்தா பார்லிமெண்ட் குழுவின் தலைவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

தலைவர் பதவிக்குப் போட்டி ஏற்படுவதினால் கட்சி பலவீனமடைந்துவிடாதென்று திரு. மொரார்ஜி தேசாய் கருதுகிறார். பார்லிமெண்ட்குழு தலைவர் தேர்தல் 12-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

லோகசபை கலைக்கப்பட்டுவிட்டதால் 12-ம் திகதி வரை தொடர்ந்து பிரதமர் பதவியில் இருக்கும்படி திருமதி இந்திரா காந்தியை ஜனாதிபதி கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

லோகசபை 16-ந் திகதி கூடவிருக்கிறது. 1-8ம் திகதி ராஜ்யசபை கூடும்.

### விஜயலக்ஷ்மி சபாநாயகர்?

லோகசபையின் சபாநாயகர் பதவி விஜயலக்ஷமி பண்டிட்டுக்கு வழங்கப்படலாம் என்று ஹேஷ்யம் அடிபடுகிறது.

---

## 'மக்கள் நமபிக்கை இழந்துவிட்டார்களாம'

### அரசாங்கத்தைக் கலைக்கும்படி சிறிமா வற்புறுத்துகிறார்

கொழும்பு, சனி

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயகா இன்று பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில் அரசாங்கத்தைக் கலைத்துவிடும்படி பிரதம மந்திரிக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கொலன்னாவை உப தேர்தல் முடிவுகள் பற்றிக் கருத்து வெளியிட்டிருக்கும் திருமதி பண்டாரநாயகா, நாட்டு மக்கள் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்துவைக்க அரசாங்கம் தவறிவிட்டதாகவும் கண்டித்திருக்கிறார்.

தென்னிந்தியாவில் சமீபத்தில் வெற்றிவாகை சூடியுள்ள திராவிடமுன்னேற்றக்கழகத்தின் நம்நாட்டு ஆதரவாளர்களான தமிழரசுக்கட்சி, திரு. தொண்ட

[6-ம் பக்கம் பார்க்க]

## சவுந்தரநாயகம வழக்கு

லண்டன், மார்ச். 4

இலங்கையரான எமில் சவுந்தரநாயகம்மீது லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு நம்பிக்கைமோசடி செய்ததாக தொடரப்பட்டிருக்கும் வழக்கு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டது. அவர் ஜூரிகள்அடங்கியநீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்.

திவாலான இன்சூரன்ஸ் கம்பனியொன்றின் அதிபராக இருந்தபோது இவர் இந்த மோசடியைப் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவருடன் பிரஸ்தாபகம்பனியின் இன்னொரு அதிபரான குயின் [illegible] என்பவரும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

---

## இடைத்தேர்தல்களில் அரசாங்கம் தோற்றது ஏன்?

### கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் சங்கத்தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''இதுவரை நடைபெற்ற இடைத்தேர்தல்களெல்லாம் இந்த அரசாங்கத்தில் பொதுமக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளதையே காட்டுகின்றது, தேசிய அரசாங்கம் பதவியேற்ற 23 மாதங்களில் 14 மாதங்கள் அவசரகாலச்சட்டத்தை முன்வைத்தே ஆட்சிசெலுத்தியுள்ளது. அதே வேளையில் பொதுமக்களுக்கு அத்தியாவசியதேவையான உபஉணவுப் பொருட்களான மிளகாய், மல்லி, வெங்காயம் ஆகியனவற்றிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவைகளிலிருந்து நாம் விடுபட்டு சுபிட்சமுடன் வாழவும், நம் நாடு முன்னேறவும், ஒரு புதிய சமுதாயத்தை அமைக்கவும், வாலிபர்கள் அனைவரும் முன்வரவேண்டும்.''

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற

(6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாம் இடையருது நம் வாழ்க்கையைஅலசி ஆராய்ந்து திருத்திக் கொண்டே இருக்க வேண்டும். நம் ஒவ்வொருவரிடமும் ஏதாவது குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆகையால் எல்லாரும் பிறர்குறைகளை தாராள மனதுடன் சகித்துப் பழக வேண்டும்.

—விநோபாஜி


ஈழநாடு

Eelan du National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஞு மாசிமீ 21 (5-3-67)


## வவனியா காணிகள்

வவனியா மாவட்டத்திலே உணவு உற்பத்திக்காகப் பெருமளவு காணிகள் புதிதாக ஒதுக்கப்பெற்றுள்ளதைப் பற்றி ஒரு முக்கிய செய்தியை நேற்று வெளியிட்டிருந்தோம். இலங்கை முழுவதிலிருந்தும்இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளனவாம். தூர இடங்களிலிருந்தும் நிலம்வேண்டுமென்று பலர் மனுச் செய்யக்கூடும். இலவசமாக நிலம் கிடைப்பதாயின் யாருக்குத்தான் அதைப்பெற ஆசையிராது?

ஆனுல் நிலத்தையாருக்குக் கொடுப்பது? யாருக்குக் கொடுக்கக்கூடாது என்பதை சரிவர ஆராய்ந்து முடிவு செய்யவேண்டியது அவசியம். ஏற்கெனவே இதேமாதிரி, பலர் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி, நிலத்தை அதிகமாகப் பெற்றும் எவ்வித பயனுமின்றி, கைப்பணத்தையும் இழந்து தவிப்பது பகிரங்க ரகசியம். ஆகவே இம்முறை இங்குநிலம்வழங்குவதில் அதிகாரிகள் அடியோடு புனராலோசனை செய்து, உணவு உற்பத்தியை உண்மையில்பெருக்கக் கூடியவர்களுக்கே நிலத்தை வழங்க வேண்டும்.

நீர்வளம் நிலவளம் மிக்க வவனியாவிலே, உழைப்பவர்களுக்கு பூமாதேவி வாரிவழங்கக் காத்திருக்கிருள். ஆனுல்அங்கு நிலத்தைப் பண்படுத்தி உழைப்பதற்கான ஆட்கள் போதியளவு இல்லை. வெளியிலிருந்தே வர வேண்டும். இன்று வவனியாக்காணிகளில் நெல் முதலியஉணவுப்பொருள்களைச் சாகுபடிசெய்யும் உழைப்பாளரில், மலைநாட்டிலிருந்து வந்துகுடியேறியுள்ள இந்திய வம்சாவளியினரே அதிகம் என்பது பகிரங்க ரகசியம். ஆனுல் அவர்களுக்குப் பிரஜா உரிமையும் காணியும் இல்லாததால் குடும்பத்துடன் அங்கு குடியேறியிருந்தும் அவர்கள் பல பல இன்னல்களால் தவிப்பதாகத்தெரிகிறது.

''பம்பாய்'' வெங்காயத்தைவிட பெரியஅளவில் வெங்காயத்தை அங்கு கமக்காரர் உற்பத்திசெய்கிருர்களாம். உருளைக்கிழங்கும் பெரிய அளவில் கிடைக்கின்றதாம். குடியேறியுள்ள மலைநாட்டுத் தொழிலாளரின் உழைப்பே இதற்கு முக்கிய காரணமென்றும், அவர்களுக்குக் காணி சாசனமாக இல்லாவிட்டாலும்நீண்டகால குத்தகைக்காவது அரசாங்கம் கொடுத்தால் உணவு உற்பத்தியை அவர்கள் அதிகம் பெருக்குவரென்றும், அவர்கள் பல சுயநலமிகளால் சுரண்டப்படுவதுடன் முடிவில் ''கள்ளத்தோணி'' என்ற பட்டம் பெற்று பொலிசின் இம்சைக்குள்ளாகி, சிலர் உயிரும் இழந்திருப்பதாகவும்புகார்கள் கிடைத்திருக்கின்றன. இது பாரதூரமான விஷயம். இதைப்பற்றி பிரதமர் உள்ளிட்டு சம்பந்தப்பட்ட தலைவர்கள் கலந்து பேசி புனராலோசனை செய்து சட்டவிதிகளைத் தக்கபடி திருத்தி, மனிதாபிமானத்துடன் காரியம்செய்யவேண்டும்.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தம் ஒன்றரை லட்சம் ''நாடற்றவர்'' விஷயத்தை தீர்மானிக்காமல் விட்டிருக்கிறது. அவர்களனைவரும்நல்ல உழைப்பாளர். வடமாகாணத்தில் வவனியா முதலிய இடங்களில் அவர்களைக் குடியேற்றி 10 அல்லது 15 வருட குத்தகை ஒப்பந்தப்படி காணிகொடுத்து உதவிஞல், அவர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதுடன் மலைநாட்டிலே பலதோட்டங்களிலுள்ள நெருக்கடியும் தீருவதாக இருக்கும். உழைப்பாளரே ஒரு நாட்டின் உண்மைச் செல்வம். துவேஷ மனப்பான்மையுடன், அவர்களில் பெரும்பாலோரும் இலங்கையில் பிறந்திருப்பினும், அவர்களை ''நாடற்றவர்'' என்று அநீதியாக ஒதுக்கி, வெளிநாடுகளுக்கு அன்னக்காவடி தூக்கி, நமது செல்வத்தையும் கோடிக்கணக்கில் வெளியேறிவரும் மடமையும் துவேஷபுத்தியும், அநீதியும் எவ்வளவு சீக்கிரம் நீக்கப்படுகின்றனவோ அவ்வளவும் நாட்டுக்கு நன்மையாகும்.

# 'முத்தமிழை அழியாது பாதுகாக்க வேண்டும்'

— உடுவில் எம. பி.

உடுவில், சனி

''தமிழரின் முத்தமிழான இயல், இசை, நாடகம், ஆகியவற்றையும் அழிந்துவிடாது பாதுகாப்பது அவசியம்.''

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நேற்று மாலை நடைபெற்ற நாடக அரங்கேற்றத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. சோமசேகரன் பேசுகையில் கூறியதாவது-

''இலங்கையில் சிங்கள சினிமா உலகு இன்று உயர்ந்த நிலையில் இருப்பதற்கு மூலகாரணம் சினிமா உலகில் ஈடுபட்டோருடைய உற்சாகமும், ஒற்றுமையான உழைப்புமே. தமிழ் சினிமாவில் நாம் நல்ல தரமான படங்களைத் தயார் செய்ய வேண்டுமானுல் தமிழர்கள் மத்தியில் உற்சாகமான கலைஞர்கள் வளர வேண்டும்.''

### கரம்பன் உணவு உற்பத்திக் குழு

ஊர்காவற்றுறை, வெள்ளி

கரம்பன் கிராம சேவையாளர், பிரிவுக்கான உணவு உற்பத்திக் குழுவின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

பின்வருபவர்கள் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. வைத்தியநாதன். உப தலைவர்: திரு. க. சிவனடியான். காரியதரிசி: திரு. இ. சுந்தரலிங்கம் (கிராமசேவையளார்).

### ஐக்கியமுன்னணி இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின்நடவடிக்கைக் குழுவினரின் விசேஷ கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது. சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக நேரடி நடவடிக்கைக்கான திகதி, இடம் ஆகியன இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவிருக்கின்றன. [ந. நி.[

யாழ்ப்பாணம்

## நீதிமன்ற கட்டிடத்தை புதுப்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடங்கள் மிகப் பழமையானவையாக விருப்பதால் சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் புதிய நீதிமன்றம் ஒன்றை அமைத்துத் தருவதாக 10 வருடங்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்த அரசாங்கம் வாக்குறுதியளித்தது. ஆனுல் இத்தனை வருடங்களாகியும் அதற்காக ஒழுங்குகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலில் இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நீதி அமைச்சரிடம் கோருவதென்ற தீர்மானம் யாழ். மாவட்ட வழக்கறிஞர்கள்சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இவை சம்பந்தமாக நீதி அமைச்சரைப் பேட்டிகண்டு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகம், வழக்கறிஞர் சங்கரப்பிள்ளை, வழக்கறிஞர் எஸ். கதிரவேற்பிள்ளை ஆகிய மூவரையும்கொண்ட நடைமுறை நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

யாழ்ப்பாண வழக்கறிஞர்கள் சட்ட நூல்நிலையம் அதிகம் விசாலமற்றதாகவும், குழாய்நீர்விநியோகம், போதிய அறைகள் இல்லாதிருப்பதாகவும் வழக்கறிஞர்கள் கடந்த 40 வருடங்களாகக் கஷ்டப்படுவதால் இதுசம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நீதி அமைச்சரைக் கோருவது.

தற்போதைய நீதிமன்றக் கட்டிடத்தின் நடுமுற்றத்தில் அரசாங்கம் மேலுமொரு நீதிமன்றத்தைக் கட்டவிருக்கும் திட்டத்தைக் கைவிடுமாறும், அப்படிக் கட்டுவதானுல் அதனுல் போக்குவரத்து. ஆகியனவற்றிற்குக் கஷ்டம் ஏற்படும் எனவும் நீதி அமைச்சரிடம் தெரிவிப்பது. [ந. நி.[

[5-ம்கலத் தொடர்ச்சி]

அண்ணுவின் தலைமையில் அதிக வெற்றியுடன்நடைபெறுமென்று எதிர்பார்ப்பது மிகையாமா?

ஃ ஃ ஃ

தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்கினுந் தொண்டர் தருகிலாப், பொய்ம்மையாளரைப் பாடதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள், இம்மையே தருஞ் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.

— சுந்தரமூர்த்திநாயனர்

ஃ ஃ ஃ

[புலவர்காள்! எம் தந்தையாகிய சிவபெருமான் தன்னையே பாடுவார்க்கு இம்மையிற்றுனே நல்ல உண்டியும் ஆடையும் பிறவும் தந்து புரப்பான். அதனுல் புகழும் மிகும். துன்பம் கெடுதலும் உண்டாம். இவையன்றி இவ்வுடம்பு நீங்கிய நிலையிற்றுனே சிவலோகத்தை ஆளுதல் உளதாம் என்றற்கு ஐயுறவைத் தருங் காரணம்யாதும் அறுதியாக இல்லை. ஆதலின் தமக்கு அடிமைகளாய்த் தம்மையே புகழ்ந்து தமக்கு விருப்பமானவற்றையே சொல்லி அதன் மேலும் தம்மையே துணையாகச் சார்ந்து நிற்பினும் அங்ஙனம் சார்ந்தவர்க்கு ஒன்றும் தருங்குணம் இல்லாத பொய்ம்மையை ஆளுதலை உடையமக்களைப் பாடுதலை விடுத்து அவனது … பாடுமின்]

## நீதிபதிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாறுயி

''இன்று எங்கள் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் எங்களை விட்டு விலகும் மாவட்ட நீதிபதி திரு. எல். எஸ். பார்ட்லெட்டிற்கு எமது நன்றியை தெரிவிப்பது நமது பொறுப்பான கடமையாகும்'' என்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. கதிர்காமலிங்கம் மாவட்ட நீதிபதி திரு. பார்ட்லெட் தற்போதயை பதவியிலிருந்து ராஜினமா செய்துள்ளதை யொட்டி நடைபெற்ற பிரியாவிடையில் பேசும்போது குறிப்பிட்டார்.

''இங்கு வந்து சொற்பகாலம்தான் கடமையாற்றிய போதிலும் மீண்டும் சட்டத்தொழிலில் ஈடுபடுவதற்காகத்தான் தாங்கள் இப்பதவியை ராஜினமா செய்துள்ளீர்கள் என்பதை எண்ணும் போது சந்தோஷமடைகிருேம். தங்களைப் போன்று பதவி வகிப்பவர்களுக்கு உள்ள நியதிகளும் வேதனமும் போதாமையால் தான் அநேகர் இப்பதவிகளிலிருந்தும் ராஜினமா செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதுஎன்றும் திரு. கதிர்காமலிங்கம் கூறினர்.

## துணிபற்றி புகார்

சுழிபுரம், சனி

சுழிபுரம் மத்திய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சங்கானை சமாஜத்தால் வழங்கப்பட்ட ஜப்பான் கால்சட்டை துணி இதுவரை விநியோகம் செய்யப்படவில்லையெனப் புகார் செய்யப்படுகிறது.

சுழிபுரம், சனி

சுழிபுரம் குடாக்கனைப் பகுதியிலுள்ள ஒரு கிணற்றில் சைக்கிள் உபகரணங்கள் சங்கானைப் பொலிசாரிஞல் கண்டு எடுக்கப்பட்டன. சுழிபுரத்தில் சமீபத்தில் களவுபோன ஓர் சைக்கிள் சம்பந்தமான விசாரணையைத் தொடர்ந்தே இப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பொலிசார் திருடரை கண்டு பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## ஐயாறன் எழுதுகிறார்

தமிழ் நாட்டின் புதிய தி. மு. க. ஆட்சி மேலான வெற்றி பெறுமென்பதற்கான சில நல்ல அறிகுறிகளை இப்போதே காணக்கூடியதாக இருக்கிறது.

தேர்தலில் பெரும்வெற்றி பெற்றுள்ள அண்ணு 'தலைவீக்கம்' கொள்ளவில்லை. காங்கிரஸ், முதலிய கட்சிகளைத் திட்டவில்லை. இதற்கு மாருக காங்கிரஸ் முதலிய எல்லாக்கட்சிகளின் ஒத்துழைப்பையும் நாடுகின்ருர். காங்கிரஸ் தலைவர் காமராஜர் டில்லியிலிருந்து திரும்பியதும், அவரையும் நேரில் கண்டு பேசி அவரது ஒத்துழைப்பை நாடப்போவதாகக்கூறுகிருர். முரண்படாத காங்கிரஸின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகவும் அறிவித்துள்ளார்.

தேர்தல் காலத்திலே பெரியார் ஈ. வெ. ரா. எவ்வளவோ எதிர்த்தும், அதையெல்லாம் மறந்து அண்ணு, திருச்சிக்குத் தமது சகாக்களுடன்சென்று பெரியாரை நேரில் சந்தித்து பத்து நிமிஷம் பேசி அவரது ஆசியையும் பெற முற்பட்டது பெரிதும் போற்றத்தக்கதாகும். எப்படியும் தம்மைப்பொறுத்தவரையில், காங்கிரஸ் மீதோ அல்லது வேறு யார் மீதோ தமக்கு இம்மி மனக் கசப்புமில்லை என்பதைக்காட்டி விட்டார், அண்ணு. தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பர்.

மேலும் முதல் நடவடிக்கையாக தமது மந்திரிகள் சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக்கொள்வர் என்று அவர் அறிவித்ததன்மூலம் பொதுவாக ஏழை மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் அவர் மேலும் பெற்றுக்கொண்டுள்ளார். இதுவரை காங்கிரஸ் மந்திரிகள் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளமும் படிச்செலவாக 250 ரூபாயும் பெற்று வந்தனர். இனி தி. மு. க. மந்திரிகள் மாதம் 500 ரூபாயும் படிச்செலவு ரூ. 250 மாக ரூ.750 தான்பெறுவர்.

இலங்கையில ஓர் அப்புக்காத்து மாதம் பல ஆயிரம் ரூபாய் சம்பாதித்து வந்தார். அவர் எம். பி. ஆனதும், தினசரி ஏராளமான வாக்காளர் பலபல பிரச்னைகளுடன் அவரைத்தேடி வருவர். யாரையும் தள்ள முடியாது, எல்லாருக்கும் கூடுமான உதவி செய்யவேண்டும். எம். பி. யானதும் தம்தொழில் வருமானத்தை இழந்ததுடன், வீட்டுக்கு வருபவர்கள் அதிகரித்து செலவும் பெருகியதாகவும், எம். பி. யாக இருப்பது பெரும்தியாகமென்றும்வாய் விட்டுச் சொன்ஞர். எம்.பி. நிலைமையே அப்படியாயின் மந்திரியின் நிலைமையை விளக்கத் தேவையில்லை. ரூபாயின் மதிப்புக்குறைந்து விலைவாசியும் வாழ்க்கைச் செலவும் உயர்ந்துள்ள இக்காலத்தில் தி. மு. க. மந்திரிகள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுவது பெரிய தியாகம்.

ஃ ஃ ஃ

வங்காளத்திலும் கேரளத்திலும் காங்கிரஸல்லாத ஐக்கிய முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறது. அவற்றிலே இரு கட்சிகம்யூனிஸ்டுகளும் அங்கம் வகிக்கின்றனர். என்றுலும் இவ்விரு கட்சியினரும் இன்னும் பரஸ்பரம் தாக்கிக் கொள்ளுவதுடன், தலைமை அரசாங்கத்தை இப்போதே பயமுறுத்தித் தாக்க முற்பட்டுவிட்டனர்! இவற்றை கவனிக்கும் போது, தமிழகத்திலே தி. மு. க. ஆட்சி

[3-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காங்கிரஸ் கட்சி புனரமைக்கப்பட வேண்டும்'

## மொரார்ஜி தேசாய் ஆலோசனை

புதுடில்லி,மார்ச்4

காங்கிரஸ் கட்சியைப் புனரமைப்பு செய்வது இப்போது அவசியமென்றும் வாக்காளர்கள் இப்போது ஜனநாயகமுறையில்அதிக ஆர்வம்கொண்டவர்களென்றும் இந்த நிலையை உணர்ந்து அதற்கேற்ப மாற்றம் செய்யப்படாவிட்டால் கட்சி அழிந்து விடும் என்றும் முன்னைநாள் நிதி அமைச்சரான திரு. மொரார்ஜி தேசாய் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

திரு.தேசாய் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுஜன அபிப்பிராயத்தைப் புறக்கணிப்பது ஜனநாயக சிரமைப்புக்கு குந்தகம் விளைவிப்பதாகவிருக்கும். ஜனநாயகத்தில் விழிப்புணர்ச்சி அடைந்துள்ள மக்களுக்கு ஏற்றமுறையில் அவர்களது தேவைகளை அளிப்பது ஒரு முக்கிய கடமையாகும்.

# பெரியாரை அண்ணா சந்தித்தார்

திருச்சி,மார்ச்4

முதல் அமைச்சர் பதவி ஏற்கவிருக்கும் திரு.ஸி.என். அண்ணாதுரை திராவிடக் கழகத்தலைவர் பெரியார் ஈ.வே. ராமசாமியை சந்தித்து ஆசி கோரினார். திரு. அண்ணாதுரையுடன் திருவாளர்கள் கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பில் தருமலிங்கம் ஆகியோரும்சென்றிருந்தனர்.

திரு.ராமசாமி, திரு அண்ணாதுரையை அன்புடன் வரவேற்று சிலமணிநேரம்பேசினார். திரு. அண்ணாதுரை தமது முன்னாள் குருவாகிய திரு. ராமசாமிக்கு மாலை அணிந்து வணங்கி தி.மு.க. மந்திரிசபைக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டார். திரு. ராமசாமி நல்வாழ்த்து தெரிவித்தார்.

**காமராஜரையும் சந்திப்பார்**

திரு.காமராஜ் டில்லியிலிருந்து சென்னைகுத் திரும்பியதும் அவரைச் சந்தித்து அவரது யோசனைகளையும் கேட்கப்போவதாக திரு. அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

## ஆசிரியருக்கு பொன்னாடை

உடுவில், சனி

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் கடந்த 35 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றி மல்லாகம் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மாற்றலாகிச்சென்ற திரு. மூ. நடராசாவுக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் பிரிவுபசாரம் நடத்தினர். தற்போதைய தலைமையாசிரியர் திரு. சி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஆசிரியரை முன்னைநாள் தலைமை ஆசிரியர் பிரம்மஸ்ரீ தி. சுப்பிரமணிய ஐயர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## கல்வி எப்படி இருக்கவேண்டும்?

### அதிபர் விளக்கம்

மாவிட்டபுரம் சனி

''கல்வி தேசிய முக்கியத்துவம் பெற்ற அம்சமென்ற முறையில் கட்சி அரசியலுக்கு மேம்பட்டதொன்றுக அத்துறையினை நாம் கருதவேண்டும்.' காங்கேசன்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் தின பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து சொற்பொழிவாற்றிய முன்னாள் வடமாநில உதவிவித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் மேற்கண்டவாறு கூறினார். இவ்விழா பாடசாலை அதிபர் திரு. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திரு. ஆர். சுப்பிரமணியம் தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது-

கல்வியானது நாட்டின் தேவைகளுக்கு ஏற்றதாக அமையவேண்டும். வெள்ளை அறிக்கையின் ஒரு பிரதான அம்சம் தொழிற்கல்வியைப் பாடசாலைகளிற் புகுத்துவதாகும். அது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு மாற்றமாகும்.

திரு. செ. கந்தப்பிள்ளை நன்றியுரை கூறினார். பாடசாலை மாணவமாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## தி.மு.க. வெற்றி: எம். பி. மகிழ்ச்சி

சாவகச்சேரி, சனி

''தமிழ்நாடு தேர்தலில் தி. மு. க. கட்சி வெற்றியீட்டுமென்று இந்திய மக்களோ, நம் நாட்டவரோ எதிர் பார்க்கவில்லை. தி. மு. க. வெற்றியீட்டியது குறித்து நாம் மகிழ்ச்சியடையாதிருக்கமுடியாது.''

இவ்வாறு நேற்று மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சாவகச்சேரித் தொகுதி தமிழ்அரசுக்கட்சி வாலிப முன்னணியின் பொதுக்கூட்டமொன்றில் பேசிய சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினம் தமது தலைமையுரையின் போது கூறினார்.

## தமிழ் உபதபாலதிபர் வருடாந்த கூட்டம்

கொழும்பு, சனி

தமிழ் உப தபாலதிபர்களின் ஐந்தாவது வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 10-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கொழும்பு சபாரியதபாற்கந்தோர் நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு உபதபாலதிபர்கள் சங்கத் தலைவர் திரு. வே. கதிர்காமத்தம்பி தலைமை வகிப்பார்.

## பிரான்ஸில் இன்று தேர்தல்

பாரிஸ், மார்ச் 4

பிரான்ஸில் நாளையும் இம்மாதம் 12-ந் திகதியும் பொதுத்தேர்தல் நடைபெறும். இத்தேர்தலில்பிரதமர் பொம்பிடுவின்கட்சிக்கே அதிகஸ்தானங்கள்கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## யுதாண்ட் வடவியட்னும் பிரதிநிதிகள் சந்திப்பு

ரங்கூன், மார்ச்4

தமது தாயகமான பர்மாவில் தங்கியிருக்கும் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டை மூவர் அடங்கிய வடவியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டி சந்தித்து வியட்னும் பிரச்னை பற்றிப்பேச்சுவார்த்தை நடத்தியது.

## காங்கிரஸ் அல்லாத மந்திரிசபை?

புதுடில்லி, மார்ச்4

உத்தரபிரதேஷ், பீகார், பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய ராஜ்யங்களில் காங்கிரஸ் அல்லாத மந்திரிசபை அமைக்க மற்றக்கட்சிகள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

## சூ-என்-லாய் முயற்சி

பிகிங், மார்ச்4

கட்டுக்கோப்பில்லாமலிருக்கும் செங்காவலர் படையினரை முறையான ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவர சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## மிகப்பெரிய அணுசக்தி நிலையம்

லண்டன், மார்ச் 4

உலகிலேயே மிகப்பிரமாண்டமான அணுசக்திநிலையம் வடமேற்கு இங்கிலாந்தின் கரையோரநகரமாகிய லங்காஷயரில்நிர்மாணிக்கப்படவிருக்கிறது

## துறைமுகத்துக்கு புதிய இழுவைப்படகு

கொழும்பு, சனி

கொழும்புத் துறைமுகக் கார்ப்பரேஷன் பிரிட்டனில் இருந்து புதிய இழுவை இயந்திரப்படகு ஒன்றைப் பெறவிருக்கிறது. இந்தஇயந்திரப்படகு இம்மாதம் 18-ந் திகதி துறைமுக கார்ப்பரேஷனிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

## சரசாலைக் கொலை சந்தேக நபர் சரண்

சாவகச்சேரி, சனி

சில தினங்களுக்குமுன் சரசாலையில் 5 பிள்ளைகளின் தந்தையான கந்தையா செல்லத்துரை [54 வயது] என்பவர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாகச் சந்தேகத்தின்மீது பொலிசாரால் தேடப்பட்டுவந்த செல்லத்துரை பேரம்பலம் என்பவர் புரக்டர் வி. செல்லத்தம்பி மூலம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

நீதிபதி இவரை இம்மாதம் 7-ம் திகதிவரை [illegible] வைக்கும்படி [illegible] விட்டார்.

# திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி விழா

திருக்கேதீச்சரம், சனி

இவ்வாண்டு மகாசிவராத்திரி விழாவினை வழமைபோல் மார்ச் 9-ம் திகதி வியாழக்கிழமை திருக்கேதீச்சரத்தில் கொண்டாட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்று கௌரி அம்பாள் சமேதகேதீச்சர நாதருக்கு நான்கு சாமங்களிலும் அபிஷேகம், பூசை நடைபெறும்.

பூசைக் காலம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வேத பாராயணம், கோஷ்டிகானம், கதாப்பிரசங்கம், சொற்பொழிவு நடைபெறும். ஸ்ரீல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சங்கித கதாப்பிரசங்கம் செய்யவிருக்கிறார்கள்.

நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தினரால் அஞ்சல் செய்யப்படும்.

வெளியூர்களிலிருந்து வருவோர்களுக்குப் போக்குவரவுத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து வருவோர்கள், புகையிரதத்தில் திரும்பி வருவதற்கு உரிய பயணச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு வந்து திருக்கேதீச்சரம் புகையிரத நிலையத்தில் இரங்கலாம். அவர்கள் இங்கிருந்து கோயிலுக்குச் செல்ல பஸ் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதைத் தவிர கொழும்பு இந்துவாலிபர் கழகத்தினர் கூட்டாகக் கொழும்பிலிருந்து செல்வதற்குப் புகையிரத பிரயாண வசதிகள் செய்து கொடுக்கிறார்கள். மேலும் இவ்விழாவினை முன்னிட்டு வவுனியா, மன்னாரிலிருந்தும் திருக்கேதீச்சரம் செல்லக் கூடியதாகப் புகையிரத இணைப்பு பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் முதலான இடங்களில் இருந்து வரும் அடியவர்களுக்கென விசேஷ பஸ் சேவையினை இ. போ. ச. ஒழுங்கு செய்துள்ளது. மன்னார் மாவட்ட அரசாங்க ஊழியர்கள், அடியவர் நலம் பேண திருக்கேதீச்சரத்தில் தண்ணீர் பந்தல் அமைக்க இருக்கிறார்கள்.

## மகா சிவராத்திரி

ஊர்காவற்றுறை, சனி

இம்மாதம் 9-ம் திகதிமகா சிவராத்திரி தினம் சரவணை தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் கொண்டாடப்படும்.

## சைவ இளைஞர் சங்கம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு சைவ இளைஞர் சங்கத்தின் அமைப்புக் கூட்டத்தில் நடைபெறும். பின்வருபவர்கள் அதன் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ச. பாலசுப்பிரமணியசர்மா காரியதரிசி திரு. பி. சண்முகலிங்கம், தனாதிகாரி: திரு. சோ. வடிவேலு.

## விநியோகம் காணாது

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் பங்கீட்டுத் திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் உப உணவுப் பொருட்கள் காணாது எனப் புகார் கூறப்படுகிறது.

மல்லியின் அளவு இம்மாதம் குறைக்கப்பட்டதை யிட்டும் மக்கள் கவலையடைந்துள்ளனர்.

## அபிஷேகம்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு - பெருங்காடு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மாசிமகத்திருவிழா சிறப்பாக் நடைபெற்றது.

## வேலணை கி. ச. தேர்தல்

ஊர்காவற்றுறை, சனி

வேலணைக்கிராமசபையின் பொதுத்தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது. அடுத்தமாதம் 15-ம் திகதி நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படும்.

## புதிய வழக்கறிஞர்

வல்வெட்டித்துறை, சனி

கரணவாய் தெற்கு கந்தையா பிள்ளையினுர் நீதியரசர்கள் திரு. அபயசுந்தரா, திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலையில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக விசுவாசப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கல்வி, மதுபரிபாலன, சுகாதார, வீடமைப்பு ஆகிய இலாகாக்களில் எழுதுவினைஞராகக் கடமையாற்றி 1961-ம் ஆண்டு ஓய்வுபெற்றார்,

இவர் கரவெட்டி பொன்னம்பலம் வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியவற்றின்பழையமாணவராவார்.

## வீடு தீக்கிரை

வல்வெட்டித்துறை, சனி

கெருடாவிலைச் சேர்ந்த தம்பன் கந்தன் என்பவரின் வீடு தீக்கிரையானது. ஓலையால் வேயப்பட்டிருந்த இவ் வீடு தற்செயலாக சமையல் அடுப்பிலிருந்த நெருப்பினால் பற்றியதாகக் கூறப்படுகிறது. தீக்கிரையான இவ்வீட்டையும் சேதமுற்ற உடைமைகளையும் கிராம சேவகர் பார்வையிட்டார்.

## 'பரீட்சையில் சித்தி அடையாததற்குக் காரணம்'

உடுப்பிட்டி, சனி

''மாணவர்கள் தமது கல்வியில் அதிக சிரத்தை எடுக்காததினாலும், தமது பாடங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாததினாலுமே பரீட்சையில் சித்தியடையத் தவறுகின்றார்கள்.''

மேற்கண்டவாறு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பெற்றோர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட பிரதேச கல்வி அதிகாரி திரு. சி. ஏ. ஞானசேகரம் பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். எஸ். செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற இப்பெற்றோர்தின விழாவில் உடுப்பிட்டி வட்டார பாடசாலைப் பரிசோதகர் திரு. வீ. தர்மசங்கரி, வண. கிச்கொக் உட்பட வேறு பலரும் பேசினர்.

திருமதி ஞானசேகரம் பரிசில்கள் வழங்கினார், கல்லூரி மாணவ மாணவிகளின் கலைக்கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## பிரசவ விடுதி

கோண்டாவில், சனி

கோண்டாவில் அரசினர் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் காலம்சென்ற திரு. கனகசபாபதியின் நினைவாக பிரசவ விடுதி ஒன்றைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனபாலா வருவார்

சுழிபுரம், சனி

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தனபால வீரசேகரா இம்மாதம் 9-ம் திகதி சுழிபுரத்தில் நடைபெறவிருக்கும் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காகவே வருகிறார். சுழிபுரம் சமஜமாச வாலிப முன்னணியினரால் இக் கூட்டம் நடாத்தப்படுகிறது.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி

கரவெட்டியைச் சேர்ந்த திரு. ச தம்பிஐயா உதவி வரி மதிப்பாளராக யாழ்ப்பாண உள்நாட்டு இறைவரித்திணைக்களப் பகுதியிலிருந்து பதவி உயர்வுடன் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# செய்திக் கடிதம்

## குரும்பசிட்டி

— நமது நிருபர் வி. பரராஜசிங்கம் —

### விவசாயிகளுக்கோர் வரப்பிரசாதம்

குரும்பசிட்டி [பேய்க் கிணறு] வற்று நீர் ஊற்றிலிருந்து சுமார் 50 ஏக்கர் விவசாய நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்க காணி நீர்ப்பாசன இலாகா நடவடிக்கை எடுத்துவருகின்றது. இந்த நீர்ப்பாசனத் திட்டம் பூர்த்தியாக 49 ஆயிரம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மாத முற்பகுதியில் நீர்ப்பாசன இலாகா பூர்வாங்க பரிசோதனைகளை ஸ்தலத்தில் நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளனர். இவ் வற்று நீர் ஊற்று அமைந்துள்ள நிலத்தை ஏற்கனவே அரசாங்கம் சுவீகரித்துள்ளது. முன்னர் ஒரு தடவை இக்கிணற்றுநீர்வற்றுமாஎன்பதை அறியும் பொருட்டு பெரிய இயந்திரங்கள் மூலம் இறைக்கப்பட்டது. தண்ணீரில் உவர்த்தன்மை உள்ளதா என்பதையும் பரிசோதனை நடாத்தி நீர்ப்பாசன இலாகா அதிகாரிகள் அறிந்து கொண்டுள்ளனர். தற்போது இக்கிராமத்தில் புகையிலை, வெங்காயம் வாழை போன்ற பயிர்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் உப உணவுப் பொருட்களான மிளகாய், குரக்கன், கிழங்கு முதலான பயிர்ச்செய்கையை அதிகரித்துக் கொள்ளமேற்படி நீர்ப்பாசனத் திட்டம் சிறந்த பலன் அளிக்கும். இந்தக் கிணற்றினை இஸ்ரவேல் நிபுணர்கள்- யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.

ஃ ஃ ஃ

### ஈழகேசரி பொன்னையா நினைவுவிழா

ஈழகேசரி 'பொன்னையா' ஞாபகார்த்தமாக குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் அகில இலங்கை ரீதியில் நாடகப் போட்டியும் பேச்சுப் போட்டியும் நடாத்த விருக்கின்றனர். கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவுகளாக நடைபெறும் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெறுபவருக்கு தங்கப்பதக்கமும், வெள்ளிக் கிண்ணம், புத்தகங்கள் இரண்டாவது, மூன்றாவது பரிசில்களாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிற்கும் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கப்படும். சமய, சமூக, இலக்கிய நாடகங்கள், 30 நிமிடங்களுக்கு அமைந்ததாக நாடகப் போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முதற் பரிசு பெறும் நாடகத்திற்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும். சன்மார்க்க சபை மண்டபத்தில் ஏப்ரல் மாதம் முதல் திகதி இவ்விழா நடைபெறும்.

ஃ ஃ ஃ

### குரும்பசிட்டியில் விளையாட்டு மைதானம்

மயிலிட்டிக் கிராமசபை குரும்பசிட்டியில் பொது விளையாட்டு மைதானம் அமைக்க ரூபா 3500 பெறுமதியான நிலத்தை வாங்கியுள்ளது. இக் காணியைத் திருத்தி விளையாட்டு மைதானம் நிறுவ ஏற்படும் செலவினத்தை நிவர்த்திக்க குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் முன்வந்துள்ளது. மைதான திருத்த வேலைக்கான நிதியைச் சேகரிக்க வெகுவிரைவில் நிதி உதவி திரைப்படக் காட்சி ஒன்றினை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### தமிழரசுத் தலைவருக்கு பாராட்டு

காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கமும் குரும்பசிட்டி நலன்புரி சபையாரும் பாராட்டுதலும் நன்றியும் தெரிவித்துள்ளனர். அரசினரின் உதவியுடன் கைத்தறி நெசவு நிலையம் அமைப்பதற்கும், வவுணத்தம்பை தெருவை தார்போட்டுச் செப்பனிட ரூபா 13 ஆயிரமும், மகாதேவா வித்தியாசாலை கட்டிடத்திருத்த வேலைகளுக்கு ரூபா 10 ஆயிரமும் அரசாங்கத்திடம் நிதி உதவியாகப் பெற்றுத் தந்தமைக்காகவே இப் பாராட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

### சமசமாஜ வாலிபர் சங்கம உதயமாகும

இலங்கை சமசமாஜ வாலிபர் சங்கக்கிளை யொன்று குரும்பசிட்டியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இம்மாதம் அக்கிளைச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படலாம் எனத் தெரிகிறது.

## பெரியவிளானுக்கு தொலைபேசி

பண்டத்தரிப்பு, சனி

பெரியவிளான்தபாகந்தோரில் பலகாலமாக டெலிபோன் வசதி இல்லாமலிருந்தது. பொதுமக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்து காங்கேசன்துறை எம். பி. திரு. செல்வநாயகம் எடுத்த முயற்சி பலனளித்துள்ளது. கூடிய விரைவில் டெலிபோன் வசதி செய்து தருவதாக பிரதம தபால் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் பெரிய விளான் மக்கள் இளவாலை உபதபாற் கந்தோருக்கே சென்று டெலிபோன் செய்ய வேண்டியிருந்தது.

---

"ராதா"

**சகல ரணக் களிம்பு**

(Radha's Universal Oilment)

சகலவித புண்கள், ரணங்கள், காயங்கள், பிள்ளைகளின் கரப்பான்கள், சிரங்குகள், பலவித தோலைப்பற்றிய வியாதிகள் சுலபத்தில் குணமடைகின்றன.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541

Residence: 7068

---


**இளம் பற்களை உரமாக வளரச் செய்யவும்**



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் என்றும் பாவியுங்கள்

**போர்ஹான்ஸ்**

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

**பெரும்பாலான பற்கள் ஈறு வியாதிகளினால் இழக்கப்படுகின்றன**

[illegible] கிட்டத்தட்ட எல்லா [illegible] அழுகல் காரணமாக தமது பற்களை இழக்கின்றனர் என உலகச் சுகாதார நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். பெரும்பாலான பற்கள் அழுகியல்ல ஆனால் ஈறு வியாதியினாலேயே இழக்கப்படுகின்றன என இவர்கள் கூறுகின்றனர்.

உறுதியான [illegible] ஈறுகளிலிருந்தே [illegible] உரமான வெண்ணிறப் பற்கள் வளரும். தினமும் போர்ஹான்ஸ் கொண்டு ஈறுகளைத் தேய்த்து பல் துலக்குவதால் ஈறுகள் உரமாகவும் உறுதியாகவும் வளரும். அதோடு, பற்களும் சுத்தமாயும் வெண்மையாயும் இருக்கும்.

இளமையில் நன்முறையில் கவனியாது விட்டபடியால்தான் பெரும்பாலான இளைஞர்கள் ஈறுவியாதிகளினால் துன்பப்படுகின்றனர். இதற்கு தினமும் போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல்துலக்குதல் அவசியம். இதனால் அவர்களது ஈறுகள் உறுதியாவதோடு பற்களும் வெண்மையாகவும் சுத்தமாகவும் இருக்கும்.


**ஒரு பல்வைத்தியரின் குறிப்புக்குத் தயாரிக்கப்பட்டது போர்ஹான்ஸ்**

புகழ் பெற்ற பல் வைத்தியரான டாக்டர் ஜெ. போர்ஹான்ஸ் டி. டி. எஸ். [illegible] தயாரிப்பு முறைக்கு ஈறுகளை [illegible] விசேட மருந்துகளைக் கலந்து தயாரிக்கப்பட்டது.

பொங்கும் [illegible] பற்களை உரமாயும் வெண்மையாயுமோ, ஈறுகளை உறுதியாயும் ஆரோக்கியமாயுமோ வைத்திருக்க முடியாது. ஈறுகளைத் தேய்த்து பற்களை சுத்தஞ் செய்ய போர்ஹான்ஸ் போன்ற ஒரு விசேட தயாரிப்பு முறை அவசியம்.

ஆரோக்கியமான ஈறுகளிலிருந்தே உரமான பற்கள் வளரும். ஈறுகள் எவ்வளவு காலத்திற்கு உறுதியாயும் ஆரோக்கியமாயும் இருக்கின்றனவோ அவ்வளவு காலத்திற்கு இவை உரமாயும் இருக்கும். [illegible]


**உரம் பற்களை என்றும் இளமையுடன் காக்கவும்**



உறுதியான ஆரோக்கிய ஈறுகளுக்கும் உரமான வெண்ணிறப் பற்களுக்கும் என்றும் பாவியுங்கள்

**போர்ஹான்ஸ்**

பற்பசை




புகழ்பெற்ற பல் வைத்தியர் ஒருவரின் தனித் தயாரிப்பு முறைக்கு தயாரிக்கப்பட்டது. இதில் ஈறுகளை காக்கும் விசேட மருந்துகள் சேர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி கடற்கரைக்கு யுத்தக்கப்பல் வந்துள்ளது

## கச்சதீவு பெருநாளை முன்னிட்டு சட்டவிரோத தடுப்பு நடவடிக்கை

மாவிட்டபுரம், சனி

வடபகுதிக் கடற்கரைகளிலும் நான்கு படைகளும் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இந்த விசேஷ உத்தரவைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரின் யுத்தக்கப்பலான 'கஜபாகுவும்' அதிவேக மோட்டார் இயந்திரப்படகுகளும், இரண்டு விசேஷ 'ஜெட்' விமானங்களும் யாழ்ப்பாணக் கடல்களிலும், ஆகாயத்திலும் ரோந்து சுற்ற அழைக்கப்பட்டுள்ளன. அவசியமேற்படின் விமானப்படையினருக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் விமானங்களும் இங்கு அழைக்கப்படலாம்.

தற்பொழுது கச்சைதீவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவிழாக் காலத்தில் கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவை நடைபெருது தடுக்கு முகமாகவே இந்தமுன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடபகுதி சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப் படைகளின் இணைப்பு அதிகாரி திரு. லயனல் சேனநாயகா, யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரிண்டன்ட் திரு. சுந்தரலிங்கம் ஆகியோர் தலைமையில் பொலிஸ் கோஷ்டியினரும், திருவாளர்கள் ஜெயவீரா, ஜில்லா ஆகியோர் தலைமையில் கடற்படையினரும், இராணுவத்தினரும் குறிகாட்டுவான், ஊர்காவற்றுறை, கரையூர் நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினதீவு ஆகிய இடங்களில் காவல்புரிந்துகொண்டிருக்கின்றனர்.

கடற்படையினரின்யுத்தக் கப்பல்களும் அதிவேகப் படகுகளும் விமானப்படையின ஜெட் விமானங்களும் கடலிலும் ஆகாயத்திலும் 24 மணித்தியாலயங்கள் ரோந்து சுற்றுகின்றன. இராணுவத்தினரும் பொலிசாரும் கரையோரங்களில் ஆயுதபாணிகளாக 24 மணி நேரமும் கடலை நோக்கிக் காவல்புரிகின்றனர்.

இலங்கையின் சரித்திரத்திலே ஆவுப உற்சவத்தின் போது இவ்வித படைகளின் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது இதுவே முதற்தடவை யென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையும் இந்தியாவும் உரிமை கொண்டாடிவரும் கச்சைதீவு, நெடுந்தீவிலிருந்து சுமார் 6 மைல் தூரத்தில் தனியாகவுள்ள ஒரு சிறு தீவாகும். குடிமனைகள் இல்லாத இத்தீவில் அர்ச். அந்தோனியாரின் தேவாலயம் ஒன்றுமட்டுமே இருக்கின்றது.

இலங்கை யுத்தக்கப்பலான கஜபாகுவும் மற்றும் எட்டுக் கடற்படைப்படகுகளும் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு 24 மணி நேரமும் ரோந்துசுற்றும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கடற்படை வீரர்களோடு பொலிசாரும் ரோந்துசுற்றுகிறார்கள். இலங்கை விமானப் படையினரின்இரண்டு யுத்த விமானங்களும் பலாலியை மையமாக வைத்து அடிக்கடி ரோந்துசுற்றுகின்றன. இவற்றைவிட இராணுவத்தினரும் பொலிசாரும் பெரும் தொகையாகக் கள்ளக்கடத்தல், சட்டவிரோத குடியேற்றம் ஆகியனவை ஏற்கனவே நடைபெற்ற இடங்களிலும் அதன் சுற்றாடல்களிலும் ரோந்து சுற்றி வருகிறார்கள். இதற்காக வெளி மாகாணங்களிலிருந்து பல பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாகக் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு வடபகுதியிலிருந்து திரட்டப்பட்ட 150 பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். இராணுவத்தினரும் பெருந்தொகையில் இடம் மாறிவந்துள்ளனர். இதற்கிடையில் சுங்கப்பகுதியினரும் தங்களது பிரிவை உஷார்ப்படுத்தியுள்ளனர்.

---

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாடி ஐக்கிய பண்டகசாலை ஆண்டு விழாக் கூட்டம் நடைபெற்றபோது கூட்டத்தில் வெடிகள் வீசி குழப்பம்ஏற்பட்டதால் கூட்டம் பின் ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாகத்தெரிகிறது.

---

### பூச்சொரிதல் விழா

நாவலப்பிட்டி, சனி

மலையகத்தில் தனிச் சிறப்புப்பெற்ற கண்டி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய பங்குனி உத்தர உற்சவத்தையொட்டி விஷேமாக இடம்பெறும் வருடாந்த நாட்டார் பூச்சொரிதல் விழா இம்மாதம் 23-ம் திகதி மாலை ஆரம்பமாகும்.

---

### இடைத்தேர்தல்களில்..

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

வட பிரதேச [ரஷ்யசார்பு] கம்யூனிஸ்ட் கட்சி வாலிபர் சங்கவருடாந்த மகாநாட்டில் மேற்படி சங்கத்தின் தலைமைப் பீடத் தலைவர் திரு. சரத்முத்தெட்டுகம பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சங்கத்தின் வடபிரதேசக்கிளைச் செயலாளர் திரு. எஸ். நடராஜா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திரு. ஐ. ஆர். அரியரத்தினம் பேசுகையில், தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சிங்கள மக்களுடன் சேர்ந்து அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடி அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தபின்னர் அவர்களது நம்பிக்கையைப் பெற்று நம் உரிமைகளைப் பெறுவதே சிறந்த வழியாகும் என்றார்.

குருநாகலை முன்னாள் எம். பி. திரு. ஜெயபத்திரா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எனது ஆரம்ப காலவாழ்க்கையும் கல்வியும் தொழிலும் தமிழ்மக்கள் மத்தியிலேயே ஆரம்பமானதால் திருவாளர்கள் பொன்னம்பலம், நாகநாதன் ஆகியோருக்கு தமிழ் மக்கள் மத்தியில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை எனக்கும் உண்டு. தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தமிழ் மக்களுடைய நியாயமான உரிமைகளைக் கொடுப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் தங்கள் பக்கத்தை தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டும். அப்போதுதான் வருங்காலத்தில் தமிழ், சிங்களமக்களைக் கொண்ட ஒரு சிறந்த தேசிய முற்போக்கு அரசாங்கம் இந்த நாட்டில் தோன்ற முடியும்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, எம். சி. சுப்பிரமணியம், ஆர். [illegible] ஆகியோர் உட்பட பல வாலிபர் சங்கப் பிரதிநிதிகளும் பேசினர்கள். [ந. நி]

---

## வேலணை பாடசாலையில் ஆங்கில ஆசிரியரில்லை

வேலணை, சனி

வேலணை அரசினர்தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியரில்லாததால் மாணவர்கள் ஆங்கிலம் படிக்க முடியாதிருக்கிறார்கள். இங்கிருந்த ஆங்கில ஆசிரியர் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாலேயே இவ்விடம் காலியாகவிருக்கிறது.

ஆங்கில ஆசிரயரில்லாத குறையைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கல்வி இலாகாவைக் கோரும் தீர்மானமொன்று வேலணைக் கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பகுதி பெற்றோர்களும் இதுசம்பந்தமாக கல்வி இலாகாவுக்குப் புகார் செய்திருப்பதாகத் தெரிகிறது.—

### கோரிக்கை

சுழிபுரம், சனி

சுழிபுரம், தொல்புரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்று சேர்ந்து தொல்புரம் பாறுவெட்டி அரசினர் வைத்தியசாலையில் கர்ப்பிணிகள் சிகிச்சை நிலையமொன்றை திறக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

சுகாதார அமைச்சர் இம்மாதம் நடுப்பகுதியில் தொல்புரம் வைத்தியசாலையைப் பார்வையிடவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அப்போது அவருக்கு வரவேற்பு ஒன்று அளித்து அமைச்சரிடம் மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்க திரு. அ. தையல்பாகர் தலைமையில் ஒரு கோஷ்டியினர் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

### கொட்டடி வாலிபர் மரணம

## மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பை மாஜிஸ்டிரேட் நிராகரித்தார்

### தொடர்ந்து விசாரணை நடத்த பொலிசாருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம். ஞாயிறு

கொட்டடியைச் சேர்ந்த 22வயது வாலிபரான செல்லையா பூபாலசிங்கத்தின் மரணம் சம்பந்தமான மரண விசாரணை அதிகாரியின் தீர்ப்பை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நிராகரித்துள்ளார்.

காலஞ்சென்றவரை கடந்த மாதம் 12ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த இராசு, தியாகராசா, செல்வம் ஆகிய மூவரும் இரும்பினலும், தடிகளினலும் தாக்கியதாய்ப் புகார்செய்யப்பட்டிருந்தது. காயங்களினல் உண்டான ஏற்புவலியினல் பூபாலசிங்கம் மரணமானதாகவும், இது ஒரு கொலையெனவும் மரணவிசாரணைசெய்த திடீர் மரண விசாரணை அதிகாரி திரு, என். இராசநாயகம் ஏற்கனவே தீர்ப்பளித்திருந்தார்.

இத்தீர்ப்பை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் நிராகரித்துயாழ்ப்பாணம்பொலிசாரை மேலும் தொடர்ந்து புலன்விசாரணை செய்யும்படி உத்தரவிட்டார். சந்தேக நபர்களான மூவரும் யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்று சரண் புகுந்தனர், மூவரையும் தலா 150 ரூபா பிணையில் விடுதலைசெய்த மாஜிஸ்திரேட் அவர்களை மீண்டும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். சந்தேக நபர்கள் மூவர்சார்பிலும் புரக்டர் த. [illegible]கநாதனின் உதவியுடன்வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம் ஆஜராகியிருந்தார்.

[ந. நி.]

---

## சுண்டிக்குழி விற்பனைநிலையம இடம் பெயர்கிறது

யாழ்ப்பணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சுண்டிக்குழியில் தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் அரசாங்க விற்பனைப்பகுதி நிலையம் விரைவில் யாழ்ப்பாணத்திலுள்ள புதிய பஸ்நிலையத்துக்கு முனபதாக உள்ளஒரு கட்டிடத்திற்கு விரைவில் இடம் பெயரவிருக்கின்றது.

கடந்த பல ஆண்டுகளாக இவ்விற்பனை நிலையம் ஒதுக்கானஇடத்தில் இயங்கி வருவதையிட்டு பொதுமக்களும் உள்ளூராட்சி மன்றங்களும் விற்பனைப்பகுதி அதிகாரிக்குப் புகார் செய்திருந்தனர். வருடப்பிறப்பிற்கு முன்னதாக புதிய இடத்திற்கு இந்த விற்பனை நிலையம் மாற்றப்படும் என அறியப்படுகிறது.

---

### மக்கள்...

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

மான் ஆசியோருடன் ஐக்கிய தேசியக்கட்சி சேர்ந்துகொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள திருமதி பண்டாரநாயகா தாம் காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியுடன் செய்துகொண்ட அருமையான ஒப்பந்தத்தின் நோக்கத்தையும் லட்கியத்தையும் பாழ்பண்ணிவிட்டதாகவும் அரசாங்கத்தைத்திட்டி இருக்கின்றார்.

மொழிக்கொள்கையையும் சரியான முறையில் கையாளவில்லையென்று கூறியுள்ள அவர் தமிழர் சிங்களவர் மத்தியிலும், தமிழர் முஸ்லிம்கள் மத்தியிலும்தப்பபிப்பிராயங்களைக் கிளறிவிட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளா .

வெறும்வாய் வார்த்தைகளில் சேவைசெய்வதில் நாங்கள் நம்பிக்கைகொள்ளவில்லை. நாட்லுள்ள முற்போக்கு சக்திகளும், சிறுபான்மையினர் மத்தியில் உள்ள முற்போக்கு சக்திகளும் எம்மில் நம்பிக்கை கொண்டிருட்கிறார்கள்' என்றும் திருமதி பண்டாரநாயகா கூறியுள்ளார்.

### உணவு உற்பத்திக்குழு அங்குரார்ப்பணம

உடுப்பிட்டி, சனி

கரணவாய்தெற்கு உணவு உற்பத்திக் குழுவின் அங்குரார்ப்பணக்கூட்டம் கிராம சேவகர் திரு. கே. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கே. வேலாயுதபிள்ளை, காரியதரிசி திரு. ஆர். இராமச்சந்திரன். தனதிகாரி திரு. கி. மயில்வாகனம். 11 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

### மரண அறிவித்தல்

சாமுவேல் பொன்னையா நவரத்தினம்

கிறேஸ் அன்னரத்தினத்தின் அன்புக்கணவரும், ரஞ்சிதநாயகம் [ரயில்வே], திருமதி அருமைநாயகம், திருமதி செல்வநாயகம், அல்பேட் [கந்தலோயா தோட்டம்], திருமதி அரியரத்தினம் ஆகியோரின் தகப்பனும். எஸ். அருமைநாயகம் [தலைமை ஆசிரியர், தெல்லிப்பழை], பி. செல்வநாயகம் [பேராதனைப் பல்கலைக்கழகம்], என். அரியரத்தினம் [இலங்கைவங்கி, பாணந்துறை], கிறேஸ்அருளேதயம், புளோரன்ஸ் ஜெபமலர் ஆகியோரின் மாமனும், எஸ். பி. ராஜரத்தினம், சபாரத்தினம், வண. விஜயரத்தினம் ஆகியோரின் சகோதரரும், ஜே.பி., ஈ.சி., ஏ.ஆர். ஆர். கே., ஜே. ரி. யேசுதாசன் ஆகியோரின் மைத்துனருமான திரு. சாமுவேல் பொன்னையா நவரத்தினம் அவர்களின் பூதவுடல் அவரது இலலத்திலிருந்துஇன்று மாலை 4மணியளவில் தெல்லிப்பழை சி. எஸ். ஐ.சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

''டெயிஸி கொட்டேஜ்''
2354 தெல்லிப்பழை.

---

### மரண அறிவித்தல்

செல்லம்மா வேலாயுதம்

புங்குடுதீவு3-ம்வட்டாரம் சோமசுந்தரம் வேலாயுதத்தின் அருமை மனைவியும், திருமதி செல்லையா பொன்னம்மாவின் சகோதரியும், தவராசசிங்கம், [மெர்க்கண்டைல்வங்கி, யாழ்ப்பாணம்], குலராசசிங்கம், நவரட்ணசிங்கம், கமலாம்பாள், மனேன்மணி ஆகியவர்களின் அன்புத் தாயாரும், ராசநாயகம் [ஆசிரியர், பளை மாவித்தியாலயம்] யோகரஞ்சிதம்தேவி [கோண்டாவில்] ஆகியவர்களின் மாமியாருமான செல்லம்ம காலமாகிவிட்டார். ஈமச்சடங்குகள் இன்று [5-3-67] பி. ப. புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் நடைபெறும் : உறவினரும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்தவராசசிங்கம்,2355

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## ஏலவிற்பனை

நிவித்திகலை, வட்டா பொத்தை வீதி 10-ம் இலக்க கடையில் நகை அடைவுபிடிக்கும் கா. கனகரத்தினம் அவர்களிடம் 10-3-65 முதல் 28-2-66 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவையும் 1967 மார்ச் மாதம் 15-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்;

பி. வெங்கடாசலம்
Auctioneer & Broker

143, மெயின்வீதி,
இரத்தினபுரி,
18-2-1967. (1×3)/2 2450

## தேவை

(1×4)

அர்ராலி மேற்கு-வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு மனேஜர் தேவை. விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி 15-3-67.

தராதரம் - கூட்டுறவுக் கலாசாலைப் பயிற்சி பெற்றவராக இருத்தல்வேண்டும்.

வயது:- 25-க்கும் 35-க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

காசுப்பிணை - ரூபா ஆயிரம் கட்டவேண்டும். ஆதனப் பிணை 1,500 ரூபா கொடுக்கவேண்டும்.

சம்பளம்:- எல்லாப் படியும் உட்பட ரூபா நூறு தரப்படும். சம்பளப்படி ஏற்றம் வேலைக்கேற்பக் கொடுக்கப்படும்.

விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

அ. க. சுந்தரம்பிள்ளை
2461 தலைவர்.

## MANOHARA

JAFFNA
Daily at 6-30, 9-30,
Eddie Jayamanne
Rukmani Devi
in
GAN THERA
[சிங்களம்]

1×2

சிவராத்திரியை முன்னிட்டு
8-3-67ல் இருந்து
சம்பூரண மகாபாரதம்
கலரி: சதம் 50

## கேள்வி விளம்பரம்

நெடுந்தீவுக் கிராமசபை அக்கிராசனரால் 1967-ம் ஆண்டு பங்குனி மாதம் 17ந் திகதி காலை 9-30 மணிவரையும் நெடுந்தீவு 15-ம் வட்டாரத்தில் குருந்தகிணறு றேட்டு வேலைக்குப் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் நெடுந்தீவுக் கிராமசபைக் கந்தோரில் 15-3-67ந் திகதி நண்பகல் 12 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

3. மற்றும் விபரங்கள் எல்லாம் நெடுந்தீவுக் கிராமசபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

ம. கணபதிப்பிள்ளை,
[ஒப்பம்]
அக்கிராசனர்,
கி. ச., நெடுந்தீவு.

கிராமசபைக் கந்தோர்,
நெடுந்தீவு,
2-3-67. 2463

## மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால், வசாவிளான் [4-ம் வட்டாரம்] கோணுவளை உறுளாய் ஒழுங்கைத் திருத்த வேலைக்கான கேள்விகள் 19-3-67-ம் திகதி காலை 9-30 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 100/ம் கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5/ம் கட்டி கிராமசபைக் கந்தோரில் 17-3-67 திகதி பகல் 12 மணிவரைக்கும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப்பற்றிய விபரங்கள் கிராமசபைக் கந்தோரில் வேலைநேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சி. அருணசலம்,
தலைவர்,
கிராமசபை, மயிலிட்டி.

கிராமசபைஅலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை,
1-3-67. 2468

## காங்கேசன்துறை பட்டினசபை கேள்வி விளம்பரம்

காங்கேசன்துறைப் பட்டினசபைக்கு சோலைவரி அறவிடுவதற்குரிய புத்திரங்களடங்கிய பதினேழு பதிவேடுகள், சபையின் திருப்திக்கேற்ற முறையில், சபை அலுவலகத்தில், வைத்துக் கட்டிக் கொடுப்பதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் யாவும், சபையினால் விநியோகிக்கப்படும் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பப்படல் வேண்டும். படிவப் பணமாக ரூபா 2/-ம் பிணைப் பணமாக ரூபா 10 -ம் சபை அலுவலகத்தில் செலுத்தப்பட்டுப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே படிவப்பத்திரங்கள் கொடுக்கப்படும். படிவப் பணமாகிய ரூபா 2/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் யாவும், சபையினால் விநியோகிக்கப்படும் படிவப்பத்திரங்களில் நிரப்பப்பெற்று ''தலைவர், பட்டினசபை, காங்கேசன்துறை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அன்றேல் சபையிலிருக்கும் விண்ணப்பப் பெட்டியிலோ 15-3-67 நண்பகல் 12 மணிக்கு முன்னதாகச் சேரும்படி அனுப்பப்படல் வேண்டும்.

படிவப்பத்திரங்கள் 13-3-67 வரை கொடுக்கப்படும். மேலும் விபரங்கள் தேவைப்படின் சபை அலுவலக நேரங்களில் சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ.வ. சதாசிவம்,
தலைவர்.

பட்டினசபை.
காங்கேசன்துறை. 2464

## லயன்ஸ்கிளப்பின சமூகசேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் லயன்ஸ் கிளப் பொதுமக்களுக்குக் கல்வியறிவு ஊட்டும்முகமாகப் பல சொற்பொழிவுகளையும், படக்காட்கிகளையும் ஒழுங்குசெய்துள்ளது. இம் மாதம் லயன்ஸ் கிளப்பினர் நடாத்தவிக்கும் சில நிகழ்ச்சிகள் பின்வருமாறு-

இன்று யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரி மடத்தில் மாணவிகளுக்குச் சொற்பொழிவும், படக்காட்சியும் நாளை கொக்குவில் மேற்கு கிராமவிருத்திச் சங்கத்தில் சொற்பொழிவும், படக்காட்சியும் 9-ம் திகதி பருத்தித்துறை, வடமராட்சி இந்துமகளிர் பாடசாலையில் சொற்பொழிவு.

## ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30. 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
நடித்த
கைதியின் காதலி

## நியூ காலிங்கன்

[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.—விஜயா
நடித்த
தொழிலாளி

## REGAL - JAFFNA

NOW SHOWING
Ed Fury
Moira Orfet
in
URSUS

## வட்டு. எம். பி. ஆஸ்திரேலியா செல்கிறார்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஆவுஸ்திரேலியா செல்லவிருக்கின்றார். சர்வதேச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து செல்லும் பிரதிநிதிகளில் ஒருவராக திரு. அமிர்தலிங்கம் இருப்பார்.

## வெற்றி தோல்வி இல்லை

உடுவில், சனி

சுன்னகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி வீரர்கள் சகல விக்கட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைப்பெற்றனர். அதன் பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரர்கள் துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களைப்பெற்றனர்.

இரண்டாவது ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா வீரர்கள் மீண்டும் சகல விக்கட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இறுதியில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## வரி வி[...]

### விற்பனை

சேவல் குஞ்சுகள்: 1நாள், 1கிழமை, [...] 2மாதக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு, விலை நிதானம். அருணு ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1589

வீடும், காணியும்:

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவன்யூவில் கட்டிடம் கட்டுவதற்குரிய சிறு காணி சிறிய வீட்டுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க. கே. வேலும்மயிலும், சோமசுந்தரம்அவன்யூ, 1585

### சோதிடம்

கைரேகை, சாதகம், சாதகக்குறிப்பு எழுதல் முதலிய பலவற்றில் 20 வருட அனுபவம் பெற்றவர். மந்திரிமார், மற்றும் பல பிரமுகர்கள் எம்மிடம் வந்து பலனை அறிந்து வியந்துள்ளனர். ச. அருணசலம் சாஸ்திரியார், அன்னதானசபை மடம், செல்வச்சந்நிதி, தொண்டமானுறு. 1593

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

கிரிக்கெட்

## தெல்லிப்பழை யூனியன் யாழ். இந்துவை வென்றது

மாவிட்டபுரம், சனி

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே தற்பொழுது நடைபெற்றுவரும் கிரிக்கட் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியுடன் கலந்துகொண்ட போட்டியில் ஒன்பது விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கோஷ்டியினர் முதலாவது ஆட்டத்தில் 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இதில் தில்லையம்பலம் ஆட்டத்தை இழக்காமல் 55 ஓட்டங்களையும், சத்தியநாதன், துரைரத்தினம் சிவராஜா ஆகியோர் முறையே 52, 35, 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்கள் தமது முதலாட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். உதயலிங்கம், சின்னராசா, தர்மரத்தினம் ஆகியோர் முறையே 24, 19, 16 ஓட்டங்களை எடுத்தனர். யூனியன் கல்லூரியைச் சேர்ந்த அருந்தவராஜா 34 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

## இப்பொழுது திரையிடப்படுகிறது

கிங்ஸ்லி — கொழும்பு
பிளாஸா — வெள்ளவத்தை
நவா — கொம்பனித்தெரு
விஜயா — மட்டக்களப்பு

மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

# தாயின் மடியில்

## இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன்
யாழ்ப்பாணம்

ஜெமினி கணேசன — சாவித்திரி
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த

# வல்லவனுக்கு வல்லவன்

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

# "வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-

**என்.வைத்திலிங்கம்நிறுவனத்தார்**

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org